சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## Case No. MCOP.24/2016

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04ம் நாள் புதன்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இரங்கசாமி | தொழில் | ஓட்டுநர்,<br>த.அ.போ.க, திருவண்ணாமலை. |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | ஜாதி | |
| கிராமம் | வாழியூர் | சமயம் | |
| தாலுக்கா | போளூர் | வயது | 52 |

**<u>04.02.2026 முதல் விசாரணை</u>**

1. நான் 1ம் எதிர்மனுதாரர் த.அ.போ.க, திருவண்ணாமலையில் ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். எனது பணியாளர் அடையாள அட்டை தாக்கல் செய்கிறேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, என்னுடைய பணியாளர் அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பார்த்தீமா ராணி என்பவருக்கு விபத்து ஏற்படுத்திய பதிவு எண்.TN32N2831 என்ற அரசு பேருந்தை விபத்து சமயத்தில் நான் தான் இயக்கினேன் என்றால் சரிதான். மேற்படி பேருந்து எந்த தடத்தில் இயக்கப்பட்டது என்றால் ஆரணியில் இருந்து தேவிகாபுரம் சென்ற பேருந்து ஆகும். மேற்படி பேருந்து ஆரணியில் இருந்து தேவிகாபுரம் செல்லும் போது தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்த பாத்தீமா ராணி அவரது மகள் சுஜி பிரியா உடன் இருசக்கர வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த நபர் என்றால் சரிதான். விபத்து ஆரணி கொசப்பாளையம் தச்சூர் சாலை ஆஞ்சநேயர் கோயில் அருகே வரும் போது ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து காலை 06.30 மணியளவில் நடந்தது என்றால் சரிதான். காலை 06.30 மணியளவில் போக்குவரத்து நெரிசல் இருக்காது என்றால் இல்லை இருந்தது.

2. விபத்து நடந்த நாள் ஞாயிற்றுக்கிழமையா என்றால் ஆமாம். ஞாயிற்றுக்கிழமை என்பதால் போக்குவரத்து நெரிசல் இல்லாத போதும் நான் தான் வேகமாக இயக்கி சாலை விதிகளை பின்பற்றாமல் விபத்து ஏற்படுத்தினேன் என்றால் இல்லை சாலை விதிகளை பின்பற்றி தான் வாகனத்தை இயக்கினேன். விபத்து ஏற்படுத்தியது சம்மந்தமாக என்மீது தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன பாத்தீமா ராணி அவரது மகள் சுஜி பிரியா இருவரும் விபத்து சமயத்தில் தலை கவசம் அணிந்து இருந்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த பிறகு என்மீது துறை ரீதியான விசாரணை செய்து நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக சுஜி பிரியா கவனக்குறைவாக வாகனத்தை இயக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசு பேருந்தை நான் இயக்கியதாலும் எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. மனுப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.